**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை,**

**கிருஷ்ணகிரி மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.112/2013 நாள்: 12.09.2019

இந்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வாதி தரப்பில் வா.சா.1 சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர், நீதிமன்றத்தில் திரு.நாகேஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | |
|---|---|
| பெயர் | : சாந்தி |
| கணவர் பெயர் | : செல்வம் |
| கிராமம் : | தாலுக்கா : |
| வயது : | வேலை : |

**4-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

எனது தாயார் சந்திரமதிக்கும் மாணிக்கத்திற்கும் திருமணமானதற்கு நான் எதாவது ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேன் என்றால் எனக்கு சரியாக நியாபகம் இல்லை. எனது தாயாருக்கும் மாணிக்கத்திற்கும் திருமணமே நடைபெறவில்லை என்றாலும் அவர்களுக்குள் தவறான உறவு இருந்து வந்தது என்றாலும் சரியல்ல. அவர்களுக்குள் திருமணம் நடைபெற்றது. மாணிக்கத்திற்கு பச்சையம்மாள் மட்டும் தான் சட்டப்படியான மனைவி என்று சொன்னால் சரியல்ல, சந்திரமதியும் சட்டப்படியான மனைவிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் எட்டாம் வகுப்பு படித்துள்ளேன். எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும். கங்காதரண், ஜீவானந்தம் ஆகியோரிடமிருந்து மாணிக்கம் இடம் வாங்கியிருந்தாரா என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை. மாணிக்கத்திற்கும் பச்சையம்மாளின் பிள்ளைகளுக்கும் இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டதற்கு பிறகு மாணிக்கம் கங்காதரண், ஜீவானந்தம் ஆகியோரிடமிருந்து இடம் கிரையம் பெற்றுள்ளார் என்றாலும் அதனால் தான் அந்த சொத்தினை இந்த வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றாலும் சரியல்ல, முதலில் பாகப்பிரிவினை நடைபெறவில்லை. கங்காதரண்

ஜீவானந்தம் ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்றதாக சொல்லும் விவரம் பற்றி எனக்கு தெரியாது. மாணிக்கத்திற்கும் சந்திரமதிக்கும் இடையே திருமணமே நடைபெறவில்லை என்றாலும் அதனால்தான் அது குறித்து வழக்குரையில் நான் தெரிவிக்கவே இல்லை என்றாலும் சரியல்ல, இருவருமே சட்ட பூர்வமான மனைவிகள்தான். மாணிக்கத்திற்கும் பச்சையம்மாளுக்கும் இடையே ஏற்பட்ட திருமணம்தான் சட்டப்படியான திருமணம் என்றாலும் அவர்களுக்கு பிறந்த பிள்ளைகள்தான் 2, 3 பிரதிவாதிகள் என்றாலும் நான் வேண்டுமென்றே இந்த விவரங்களைப்பொறுத்தும் வழக்குரையில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் மாணிக்கத்திற்கு முறைமண உறவில் பிறந்த பிள்ளை அல்ல என்றாலும் அதனால் நான் மாணிக்கத்திடம் சொத்தில் பாகம் கோர முடியாது என்றாலும் சரியல்ல, நான் முறைமண முறையில்தான் பிறந்த முதல் பிள்ளை ஆவேன். நான் முறைமணமற்ற உறவில் பிறந்த பிள்ளை என்பதால் , 1, 2, 3 பிரதிவாதிகள் சேர்ந்து 4-ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளதைப் பொறுத்து எனக்கு கேள்வி எழுப்ப உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல, நான்தான் சட்டப்படியான முதல் பிள்ளை ஆவேன். நான் பிரதிவாதிகளுக்கிடையே ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினை மறைத்தும், உண்மையான சங்கதிகளை தெரிவிக்காமலும் வழக்கு தொடுத்திருப்பதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல, நான்தான் உண்மையான வாரிசாவேன். நான் முறையற்ற உறவில் பிறந்த காரணத்தினால்தான் எனக்கு மாணிக்கம் கங்காதரன், ஜீவானந்தம் ஆகியயோரிடம் பெற்ற கிரையம் குறித்து எனக்க தெரியவில்லை என்றுசொன்னால் சரியல்ல, கிரையம் பெற்ற விவரம் தெரியாத காரணத்தால் நான் முறையற்ற உறவில் பிறந்த பிள்ளை ஆகிவிடமாட்டேன். நானும், 1-ம் பிரதிவாதி மாணிக்கமும் சேர்ந்து அக்கிரம லாபம் அடையவேண்டும் என்பதற்காக வழக்கிற்காக வேண்டி வா.சா.ஆ.10,11 ஆவணங்களை ஏற்படுத்தி உள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. மாணிக்கம், வேலு, திருமால் ஆகியோர் அவர்களது குடும்ப அவசரத் தேவைக்காக வேண்டி தாவா சொத்தின் ஒரு பகுதியை வசந்தாவிற்கு கிரையம் கொடுத்துள்ளனர் என்று சொன்னால் அது குறித்து எனக்கு

தெரியாது. 2005-ம் வருடம் வசந்தா கிரையம் பெற்றது முதலாகவே அச்சொத்தினை வசந்தாவே அடைந்து அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றாலும் நான் அந்த சொத்தினை பொறுத்து இந்த வழக்கில் சரியாக மீதிப்பீடு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணமானது நான் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு என்றால் சரிதான், அந்த வழக்கறிஞர் அறிவிப்பில் வேலுவும், திருமாலும் மாணிக்கம், பச்சையம்மாளுக்கு பிறந்த பிள்ளைகள் என சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. அதேபோல வா.சா.ஆ.3 ஆவணத்தில் நான் மாணிக்கத்திற்கம் சந்திரமதிக்கும் பிறந்த பிள்ளை என சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை நான் வழக்கறிஞரிடம் சொன்னேன், ஆனால் அந்த விவரம் அறிவிப்பில் குறிப்பிடாமல் விடுபட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் நான் மாணிக்கம் சந்திரமதி ஆகியோருக்கு பிறந்த பிள்ளை என சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் என் கணவர் இறந்து எந்த ஆண்டு கல்லூருக்கு குடி வந்தேன் என்றால் சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு 2013 ___ம் ஆண்டு வாக்கில் வந்திருப்பேன். பச்சையம்மாள் இறந்ததற்கான வாரிசு சான்றினை நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் வீட்டில் உள்ளது, ஆனால் இந்த வழக்கில் ஒப்படைக்கவில்லை. பச்சையம்மாள் இறந்து எத்தனை வருடங்கள் ஆகிறது என்றால் சுமார் 8 ஆண்டுகள் ஆகும். பச்சையம்மாளுக்கும் மாணிக்கத்திற்கும் பிறந்த பிள்ளைகள்தான் 2. 3 பிரதிவாதிகள் என்பதையும் பச்சையம்மாள் சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார் என்ற விவரத்ததையும் நான் எனது வழக்குரையிலோ முதல் விசாரணை வாக்குமூலத்திலோ அல்லது வா.சா.ஆ.3 வழக்கறிஞர்அறிவிப்பிலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. சந்திரமதி மாணிக்கம் ஆகியோர் உறவில் நான் எத்தனை ஆண்டுகள் கழித்து பிறந்திருப்பேன் என்றால் சுமார் 1 அல்லது 2 ஆண்டுகளுக்குள் பிறந்ததிருப்பேன். மாணிகத்திற்கும் பச்சையம்மாளுக்கும் திருமணமாகி 20வருடங்களாக அவர்களுக்குள் குழந்தை இல்லாமல் இருந்து , அதன்பிறகு மாணிக்கத்திற்கும் சந்திரமதிக்கும் நான் பிறந்தேன்

என்பதையும் அதன்பின்னர் பச்சையம்மாளுக்கும் , மாணிக்கத்திற்கும் 2. 3 பிரதிவாதிகள் பிறந்தார்கள் என்றவ விவரத்தையும் நான் எனது வழக்குரையிலும் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான், வழக்கறிஞரிடம் சொன்னேன் அவர் சொல்லாமல் விட்டுள்ளார். மாணிக்கத்திற்கும் சந்திரமதிக்கும் தவறான உறவில் பிறந்த பிள்ளைதான் நான் என்பதை வேண்டுமென்றே வழக்குரையில் சொல்லாமல் மறைத்தும், சுத்தமான கரங்களுடன் நான் நீதிமன்றத்தை அணுக தவறியுள்ளேன் என்றாலும் அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. 2005-ம் வருடம் வசந்தா கிரையம் பெற்ற விவரம் எனக்கு தெரிந்திருந்தும் , நான் உரிய காலத்திற்குள் வழக்கு தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு கால தோஷத்துடன் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல, எனது மாமனாார் மற்றும் உறவினர்கள் உடல்நிலை சரியில்லாததால் நான் உடனடியாக வழக்கு தாக்கல் செய்யவில்லை. அப்படியானால் 2005-ம் வருடம் வசந்தா கிரையம் பெற்ற விவரம் எனக்கு அப்போதே தெரியுமா என்றால் கிரையம் முடிந்து சுமார் 4 மாதங்களில் தெரிந்து நான் அப்போதிருந்தே வாய் வார்தையாக கேட்டு வந்தேன் , அதன்பின்னர்என் குடும்பத்தில் நான்கு நபர்கள் அடுத்து அடுத்து இறந்துவிட்டனர், என்பதால் என்னால் உடனடியாக வழக்கு தாக்கல்செய்யஇயலவில்லை. நான் வசந்தாவிற்கு கிரையம் கொடுத்த விவரம் தெரியவந்தவுடன் வேலு, திருமாலை அணுகி கேட்டதற்கு அவர்கள் அந்த சொத்து எங்கள் பாட்டன் சொத்து நாங்கள் குடும்ப தேவைக்காக விற்று விட்டோம் என்று சொன்னார்களா என்றால் ஆமாம், சொன்னார்கள் ஆனால் எனக்கும் அதில் உரிமை உள்ளது. 2005-ம் வருடத்தில் கிரையம் பெற்ற 4 மாதத்தில் எனக்கு அது குறித்து விவரங்கள் தெரிந்து 2, 3 பிரதிவாதிகளுடன் நான் சென்று கேட்டதற்கு அவர்கள் குடும்பசொத்து எங்கள் பாட்டன் சொத்து என்று கூறி விட்ட விவரத்தினை நான் எனது வழக்குரையிலோ, சட்ட அறிவிப்பிலோ முதல் விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. வசந்தாவின் கணவர் சுப்பிரமணிக்கும் , 1-ம் பிரதிவாதி மாணிக்கத்திற்கும் இடையே

வழிப்பிரச்சனை இருந்து வருகிறது என்றுசொன்னால் சரிதான், மேற்படி வழிப்பிரச்சனை மனதில் வைத்து கொண்டு நானும் எனது தந்தையும் வசந்தாவை இடையூறு செய்ய வேண்டும் என்பதற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மாணிக்கத்திற்கு பிறந்த பிள்ளை அல்ல என்றாலும் நான் சந்திரமதிக்கும் , வேறு நபருக்கும் பிறந்த பிள்ளை என்றாலும், அதனால்தான் வழக்குரையில் நான் சந்திரமதியின் பிள்ளை என்பதையும் பச்சையம்மாள் பிள்ளைகள் குறித்த விவரங்களையும் நான் தெரிவிக்காமல் இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. கங்காதரன் , ஜீவானந்தம் ஆகியோரிடமிருந்து 1-ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ள விவரத்தை 4-ம பிரதிவாதி எதிர் வழக்குரையில் தெரிவித்துள்ள போதிலும் நான்அந்த கிரைய சொத்தினை இந்த வழக்கில் சேர்க்க தவறியுள்ளேன் என்றுசொன்னால் சரியல்ல. 1, 2, 3 பிரதிவாதிகள்தான் கூட்டு குடும்பத்தின் அங்கத்தினர் என்றாலும், நான் அவர்கள் அச்சொத்தினைப் பொறுத்தும் 4-ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ள சொத்தினைப் பொறுத்து கேள்வி கேட்க எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முடிவுற்றது.)**